**எம்.சி.ஓ.பி. எண்: 216/2024**

The Witness sweared under Oaths Act 1969 on this the day of 30th day of June 2025
ம.சா.2. **ரேணுகா**

**3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் படிக்கவில்லை. எனக்கு நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் தெரியும். என்னை சாட்சி சொல்வதற்கு மனுதாரர்கள் அருணா மற்றும் அனிதா அழைத்தார்கள். எனது நாத்தனார் பெயர் செல்வி ஆகும். அவரது கணவர் பெயர் எனக்கு தெரியாது. செல்வி எனது கணவர் ஏழுமலையின் அக்கா ஆவார். எனக்கு திருமணம் ஆகி சுமார் 23 வருடங்கள் ஆகிறது. செல்வியின் கணவர் சுமார் 23 வருடங்களுக்கு முன்னரே இறந்துவிட்டார். செல்வி எங்களுடன் சுமார் 12 வருடங்கள் வசித்து வந்தார். அப்போது இருந்தே செல்வியின் கணவர் யார் என்று நான் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. மனுதாரர்கள் திருமணம் முடித்து தங்கள் கணவருடன் குடியிருந்து வருகிறார்கள். நான் மனுதாரர்கள் செல்வியின் வாரிசுகள் என்பதற்கும் நான் தான் இறந்துபோன செல்வியின் நாத்தனார் என்பதற்கும் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. நான் நீதிமன்றத்தில் எனது ஆதார் அட்டை தாக்கல் செய்துள்ளேன். உண்மையில் அவ்வாறு எந்த ஆதாரமும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. செல்வியை ஒரு இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்படுத்தியது. அது என்ன வாகனம் என்றும் என்ன நிறம் என்றும் எனக்கு தெரியாது. ஆட்டோ இடித்து செல்விக்கு விபத்து ஏற்படவில்லை என்றால் சரிதான். அந்த விபத்து சம்மந்தமாக குற்றவியல் நடுவர் மன்றத்தில் நான் சாட்சி சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. விபத்து ஏற்படுத்திய வாகனம், அதன் எண் மற்றும் நிறம் ஆகியவற்றை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் புகார் கொடுக்கும் போதே எனக்கு தெரியாது. உண்மையில் நான் விபத்தை பார்க்கவில்லை என்றும் அதனால் தான் நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது என தவறாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் விபத்து ஏற்படுத்திய வாகனம் , வாகன எண் , நிறம் தெரியாது என தற்போது கூறும் நிலையில் முதல் தகவல் அறிக்கையின் போது பொய்யான வாகனத்தை குறிப்பிட்டு விபத்து ஏற்படுத்தியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. உண்மையில் நான் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள வாகனம் டிஎன்23ஏஏ 9567 விபத்து

ஏற்படுத்தவில்லை என்றும் அவ்வாறு விபத்து ஏற்படுத்தியிருந்தால் காவல் துறையினர் குற்றபத்திரிக்கை தாக்கல் செய்திருப்பார்கள் என்றால் சரியல்ல. உண்மையில் நான் கூறியவாறு விபத்து ஏற்படவில்லை என்றும் செல்வி எனது நாத்தனார் என்பதால் அவர் நஷ்ட ஈடு பெற வேண்டும் என்ற நோக்கத்துடன் பொய்யான வழக்கு போட்டுள்ளோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் சாட்சி சொல்ல எனக்கு தகுதி இல்லை என்றால் சரியல்ல. எனது சாட்சியம் ஏற்றுகொள்ள தக்கது அல்ல என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது. மறு விசாரணை இல்லை.**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்<br><br>Sd/- S.Senthilbabu,<br><br>சார்பு நீதிபதி.<br>போளூர். |